**Illustration:1**

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT & SESSIONS COURT, THENI.**

**Case No: SC 12/2020**

**Prosecution Witness 8 (LW 26)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.செல்வம் | ஜாதி | : | -- |
| அப்பா பெயர் | : | | தொழில் | : | மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை-1 (மதுரை தெற்கு) |
| கிராமம் | : | | சமயம் | : | -- |
| தாலுகா /மாவட்டம் | : | | வயது | : | /2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 20.03.2025.

( எதிரிகள் ஆஜர்)

(சாட்சி அழைக்கப்பட்டு சம்பந்தப்பட்ட போலீசாரால் அடையாளம் காணப்பட்டு ஓட்டுநர் உரிமம் மூலம் ஒப்பீடு செய்யப்பட்டு பின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் அளிக்கிறார்)

முதல் விசாரணை

1. நான் தற்பொழுது மதுரை மாவட்டத்தில் மோட்டார் வாகன ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 05.03.2019-ம் தேதி தேனி வட்டார போக்கு வரத்து அலுவலகத்தில் மோட்டார் வாகன ஆய்வாளராக பணியில் இருந்த போது ஆண்டிபட்டி காவல் ஆய்வாளர் கொடுத்த வேண்டுகோள் கடிதத்தின் அடிப்படையில் அரசு பேருந்து TN 74 N 1263 என்ற வாகனத்தை மோட்டார் வாகன ஆய்விற்காக ஆய்வு படுத்தினார். அதை அன்றைய தினமே ஆய்வு செய்து மோட்டார் வாகன ஆய்வறிக்கை கொடுத்தேன். அந்த அறிக்கை அ.த.சா.ஆ.7 ஆகும். எனது கருத்தில் அந்த வாகனத்தில் வாகன பழுது ஏதும் ஏற்பட்டு விபத்து ஏற்படவில்லை என்று சான்று அளித்தேன்.

2. 18.06.2019 அன்று இந்த வழக்கு சம்பந்தமாக ஆட்டோ பதிவு எண். TN 68 H

1897 என்ற வாகனத்தையும் ஆய்வு செய்து கொடுத்த மோட்டார் வாகன ஆய்வறிக்கை அ.த.சா.ஆ.8 ஆகும். அந்த கருத்துரையில் வாகனத்தில் பழுது ஏற்பட்டு விபத்து ஏற்படவில்லை என்று சான்று கொடுத்தேன். அந்த ஆட்டோவை இயக்கிய ஓட்டுநரின் உரிமத்தை எனது ஆய்வின் போது சமர்பிக்கவில்லை. என்னை போலீஸார் விசாரித்தார்கள்.

## எ.த.கு.வி

| | |
|---|---|
| கேள்வி | நீங்கள் சம்பவ இடம் சென்று ஆய்வு செய்தீர்களா ? |
| பதில் | ஆம். |
| கேள்வி | நீங்கள் சம்பவ இடத்தில் எந்த தேதியில் ஆய்வு செய்தீர்கள்? |
| பதில் | விபத்து நடந்த அன்று. |
| கேள்வி | வழக்கின் வரலாறு உங்களிடம் கொடுத்தார்களா என்றால்? |
| பதில் | வாய்மொழியாக சொன்னார்கள். |
| கேள்வி | விபத்து பதிவேட்டில் அரசு பேருந்து மதுரை ஆண்டிபட்டி மெயின் ரோட்டில் உள்ள கொண்டமநாயக்கன் பட்டி அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி அருகில் நின்று கொண்டிருந்தது என்றால்? |
| பதில் | சரிதான். |
| கேள்வி | சம்பவ இடம் அருகில் சாலை எஸ் வளைவு போன்று இருக்கும் என்றால்? |
| பதில் | சரிதான். |
| கேள்வி | சம்பவ இடத்தில் சாலை தடுப்பு ஸ்டாண்ட் உள்ளது என்றால்? |
| பதில் | சரிதான். |
| கேள்வி | விபத்து நடந்த 3 மாதம் பிறகு தான் ஆட்டோ மோட்டார் வாகன ஆய்விற்கு உட்படுத்தப்பட்டது என்றால்? |
| பதில் | சரிதான். |
| கேள்வி | அந்த 3 மாதம் யார் பொறுப்பில் ஆட்டோ இருந்தது என்று உங்களுக்கு தெரியாது என்றால்? |
| பதில் | சரிதான். |
| கேள்வி | புள்ளிமான் கோம்பை பிரிவில் காவல் சோதனை சாவடி உள்ளது என்றால்? |
| பதில் | சரிதான். |
| கேள்வி | பொதுவாக எஸ் வளைவு சாலையை வேகமாக வண்டியை இயக்க கூடாது என்றால்? |
| பதில் | சரிதான். |
| கேள்வி | உங்கள் ஆய்வு அறிக்கையில் பேருந்தின் வலது பக்க முன் பகுதியில் |

| | |
|---|---|
| | ஓட்டுநர் இருக்கை பக்கம் சேதம் அடைந்துள்ளதாக குறிப்பிட்டுள்ளீர்கள் என்றால்? |
| பதில் | சரிதான். |
| கேள்வி | டீசல் பெட்டியில் இருந்து முன் சக்கரம் வரை பேருந்தின் உடம்பில் கீறல் இருந்தது என்றால்? |
| பதில் | சரிதான். |
| கேள்வி | அந்த கீறலுக்கு மேல் பகுதியில் ஜன்னல் பக்கம் சேதம் இல்லை என்று சொன்னால்? |
| பதில் | சரிதான். |

மறு விசாரணை: இல்லை

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல சுருக்கெழுத்தரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 20.03.2025 அன்று வியாழக்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

GOPINATHAN S

Digitally signed by GOPINATHAN S
Date: 2025.03.20 19:04:48 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி. தேனி.
20.03.2025.